

# 27

# இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம்

உலகில் தோன்றிய நபிமார்களுள் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முக்கியமான ஒருவராவார். அவரது பரம்பரையில் இஸ்மாயில் அலைஹிஸ்லாம், இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம், யஃகூப் அலைஹிஸ்ஸலாம், யூஸுப் அலைஹிஸ்ஸலாம் ஆகியோர் நபிமார்களாக இருந்துள்ளார்கள். இதனால் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் **அபுல் அன்பியா - நபிமார்களின் தந்தை** என அழைக்கப்படுகின்றார்.

இவர்கள் கி.மு. இருபத்தோராம் நூற்றாண்டில் ஈராக்கின் அப்போதைய தலைநகராக இருந்த உர் எனும் ஊரில் ஆஸர் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். ஆஸர் சிலை வடிப்பவராகவும் சிலை வணக்கத்தில் ஈடுபடுபவராகவும் காணப்பட்டார்.

இளமையிலேயே கூரிய புத்தியுடைய இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தந்தையினதும் பொது மக்களதும் வழிபாட்டுமுறை தவறானது என்பதை எடுத்துக் காட்டினார். அதனை அவரது தந்தையோ, ஆட்சியாளரோ, பொது மக்களோ ஏற்றுக் கொள்ளவில்லை. தமது வழிபாட்டு முறையைக் கண்டித்தமைக்காகத் தீக்குண்டத்தை ஏற்பாடு செய்து இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அதில் எறிந்து கொலை செய்யத் தீர்மானித்தனர். எனினும், அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அந்தத் தீக்குண்டமோ சாந்தியளிக்கும் குளிராக மாறி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது உயிரையும் உடலையும் காத்தது.

அதிலிருந்து பாதுகாக்கப்பட்ட அவர்கள் மனைவி ஸாராவுடன் ஈராக்கிலிருந்து எகிப்துக்கு ஹிஜ்ரத் சென்றார்கள். இந்த ஹிஜ்ரத்தின் போதே இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமக்குச் சந்ததியொன்றை அருள்பாலிக்குமாறு பிரார்த்தனை செய்தார்கள்.

எகிப்துக்குச் சென்ற இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹாஜர் என்ற பெண்ணை அங்கு மணமுடித்தார்கள். எனினும், முதுமை வரை அவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை. எதிர்பாராத நிலையில் ஹாஜருக்கு இஸ்மாயீல் என்ற குழந்தையும் ஸாராவுக்கு இஸ்ஹாக் என்ற குழந்தையும் கிடைத்தது. அவர்கள் எகிப்தில் இருந்தபோது மக்காவுக்குச் செல்லுமாறும் அங்கு ஹாஜரையும் குழந்தை இஸ்மாயீலையும் விட்டுச் செல்லுமாறும் அல்லாஹ் கட்டளை பிறப்பித்தான். இதற்கமைய எகிப்திலிருந்து வெளியேறி மக்கள் குடியிருக்காத அந்தப் பாலை நிலத்தில் (மக்காவில்) தாயையும் குழந்தையையும் விட்டுவிட்டு அவர்கள் இருவரின் நலனுக்காகவும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தவராக வெளியேறினார்கள்.

மக்காவில் குழந்தையுடன், தனியே விடப்பட ஹாஜர் தாம் கொண்டு சென்ற உணவும் நீரும் தீர்ந்த பின்னர், குழந்தை பசியால் அழவே நீர் தேடி அலைந்தார்கள். இதன்போது ஸபா மலைக் குன்றிலிருந்து மர்வாவுக்கும் மர்வாவிலிருந்து ஸபாவுக்கும் மாறி மாறிச் சென்றபோதும் அங்கு மனிதர்களையோ நீரையோ காணவில்லை. அவ்வேளை, ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அங்கு தோன்றி, குழந்தையின் காலடியில் ஸம் ஸம் நீரூற்றை ஏற்படுத்தினார்கள். குழந்தையைப் பார்க்க வந்த ஹாஜர் நீரூற்றைக் கண்டு மகிழ்வடைந்தார். ஊற்றைச் சுற்றி அணை அமைத்தார். நீரைக் கையால் அள்ளித் தானும் குடித்து குழந்தைக்கும் அதனைப் பருக்கினார். மக்காவில் வணிகப் பயணத்தை மேற்கொண்டிருந்த ஜுர்ஹூம் கோத்திரத்தார் நீர் தேடி அலைந்தனர். பறவைகள் வட்டமிடுவதைக் குறியாகக் கண்டு ஸம் ஸம் பக்கம் நெருங்கினர். நீரூற்றைக் கண்டபோது, நீர்பெற அனுமதி கோரினர். ஹாஜர் அனுமதித்தார். இதனால் அங்கு குடியிருப்பொன்று உதயமானது. இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் இக்கோத்திரத்தினர் அரபு மொழியைக் கற்றுக் கொண்டனர்.

இவ்வாறு வாழும் கட்டத்தில்தான், இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது மகனைக் குர்பானி செய்யக் கனவு கண்டார்கள். மக்காவுக்கு வந்து மகனை மினாவின் பக்கம் அழைத்துச் சென்று தாம் கண்ட கனவைக் கூறி மகனின் விருப்பத்தைக் கேட்டார்கள். ''உங்களுக்கிடப்பட்ட கட்டளைப்படியே நீங்கள் செய்யுங்கள் தந்தையே'' என்று மகன் இஸ்மாயீல் கூறினார்கள். மகனை குர்பான் செய்ய முன்வந்தார்கள். அல்லாஹ் அதனை விரும்பவில்லை. அவர்கள் காப்பாற்றப் பட்டார்கள். இதனால்தான் தந்தையை **கலீலுல்லாஹ்** என்றும், மகனை **ஸபீஹுல்லாஹ்** என்றும் வழங்குகின்றோம்.


கஃபாவும் மகாமு இப்றாஹீமும்

இதற்குச் சில ஆண்டுகளுக்குப் பின்னால் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மகனுடன் சேர்ந்து கஃபதுல்லாவைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டார்கள். கஃபாவின் சுவர்கள் மேலெழுந்த போது, ஒரு கல்லில் ஏறி நின்று அதனைப் பூரணப்படுத்தினார்கள். அந்தக் கல்லில் இப்ராஹீம்

அலைஹிஸ்ஸலாம் அவர்களின் இரு பாதங்களும் பதிந்திருந்தன. அது **மகாமு இப்ராஹீம்** என அழைக்கப்படுகின்றது. இதன் பின்னர் மக்களை ஹஜ்ஜுக்கு அழைக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்டான். ஹஜ் கடமையில் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் குடும்பம் செய்த தியாகம் நினைவூட்டப்படுகின்றது.

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிரார்த்தனைக்கேற்ப மக்கா ஒரு யாத்திரைத் தலமாக மாறியுள்ளது. ஸம் ஸம் நீர் ஒரு வளமாக அமைந்துள்ளது. ஹஜ் கடமை இடம்பெறுகின்றது. மக்கள் குடியேறினார்கள். அவரது சந்ததியிலேயே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் பிறந்திருக்கிறார்கள்.

***''இப்ராஹீமிடத்திலும், அவர்களுடனிருந்தவர்களிடத்திலும் அழகிய முன்மாதிரி இருக்கின்றது'' (60: 4)***

என இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ் வெகுவாகப் பாராட்டியுள்ளான். ஆதலால் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் முன்மாதிரிகளை எம் வாழ்விலும் பின்பற்றி ஒழுகுவோம்.

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

أَبُو الأَنْبِيَاء    زَمْ زَمْ    أَبٌ رَحِيْمٌ    جُرْهُم

### பயிற்சி

**அ. சுருக்கமான விடை தருக.**

1. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சிறப்புப் பெயரைக் குறிப்பிடுக.
2. அவர் எந்த நாட்டில், எந்த ஊரில் பிறந்தார்?
3. அவரது தந்தையின் பெயரையும் தொழிலையும் குறிப்பிடுக.
4. அவரது காலத்தில் இடம்பெற்ற வழிபாட்டு முறை யாது?
5. அவர் வாழ்ந்த மூன்று நாடுகளைக் குறிப்பிடுக.
6. அவரது மனைவி, மக்களின் பெயர்களைத் தருக.
7. மகாமு இப்ராஹீம் அப்பெயர் கொண்டு அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

**ஆ. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபிமார்களின் தந்தை எனப்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
2. ஸம் ஸம் ஊற்று தோன்றிய முறையைச் சுருக்கமாக எழுதுக.
3. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய குடும்பத்துடன் தொடர் புடைய ஹஜ் செயற்பாடுகளைப் பட்டியற்படுத்துக.
4. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் காணப்பட்ட உயர் பண்புகளை எடுத்துக்காட்டுக.